TAMIL NADU LEGISLATURE
5 - MAY 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1972 சனவரி 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Crimes in Tamil Nadu

* 31 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government is aware of the report of the Home Ministry released about 4th May 1970, about the incidence of high percentage of crimes in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மத்திய அரசு வெளியிட்டுள்ள இந்தியாவில் குற்றம் 1968 என்ற சிறு வெளியீடு வந்துள்ளதை இந்த அரசு அறியும். இம்மாநிலத்தில் குற்றங்களின் சதவிதம் அதிகமாயிருந்ததாக அந்த வெளியீடு குறிப்பிடவில்லை.

Police Benevolent Fund

* 32 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Police Benevolent Fund has been increased from the year 1971–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு காவலர் நல நிதியின் ஆண்டு மானியமான ரூ. 1 லட்சம் என்பது 1971-72-ஆம் ஆண்டிலிருந்து ரூ. 1½ லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: காவலர்களின் ஜீவிய காலத்திலேயே அவர்களுக்கு ஏதாவது நெருக்கடி நிலை ஏற்படும்போது இந்த நிதி வழங்கப்படுமா?

[1972 சனவரி 25

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்காக அமைக்கப் பட்டுள்ள மத்தியக் குழு, 'தகுதி' என்று கருதுகிற நேரங்களில் காவல்துறைப் பணியாளர்களுடைய பொது நலனுக்காக அந்த நிதியை வழங்கும்.

காவல்துறையில் முஸ்லீம்கள்

***33 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

போலீஸ் துறையில் முஸ்லீம்களுக்கு எத்தனை சதவீதம் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவல்துறையின் எல்லாப் பதவித்தரங்களையும் கருதிப்பார்க்கையில் முஸ்லீம்களின் பிரதி நிதித்துவம் அந்தத் துறையில் 4.04 சதவீதம் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படி முஸ்லிம் சமுதாயத்திற்கு இன்னும் அதிகப்படியான பிரதிநிதித்துவம் போலீஸ் துறையில் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதுவும், பரந்த மனப்பான்மை கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்களிடம் அந்தத் துறை இருக்கின்ற காரணத்தினால் இன்னும் அதிகமான தொரு பிரதிநிதித்துவத்தை அந்தச் சமுதாயத்திற்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முஸ்லிம்கள் என்று பார்த்து மத அடிப்படையில் இவைகளை அமைக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனாலும், பின்தங்கியவர்களுக்குச் சலுகைகளை அளிப்பது என்ற வகையில் 25 சதவீதம் என்பதை 31 சதவீதமாக ஆக்கியிருக் கிறோம். அந்த அடிப்படையில் பின்தங்கிய முஸ்லிம்களுக்கு இடங்கள் வழங்கப்படுவதற்கு இந்த அரசு எல்லாவகையான ஆதரவையும் தரும்.

திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு முதல்வரவர்கள் பதில் கூறும்போது முஸ்லிம்களுக்கு காவல்துறையில் 4.04 சதவீதம் பிரதிநிதித்துவம் கொடுத்து இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த 4.04 சதவீதம் என்பது, தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் முஸ்லிம் சமுதாயத்தினரில் இது எத்தனை சதவீதம் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாட்டினுடைய மொத்த மக்கட்தொகையில் 1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி முஸ்லிம் மக்களின் தொகை 21,05,053 ஆகும். இது தமிழ்